பக்கங்கள்: 09

# காலைக்கதிர்

Kalaikkathir

விழியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 23 செவ்வாய்க்கிழமை 06.05.2025 கதிர் 178

### இனி இது ரகசியம் அல்ல!

போர் நடந்து 15 வருடங்களுப் பின்னர் திடிரென போரின்போது படையினரால் கைப்பற்றப்பட்ட நகைகள் பெறுமதி மதிப்பீட்டிற்காக ஒப்படைக்கப்பட்டமையின் ☞2

# காணிகளைச் சூறையாட முயல்கிறது அரசு அதற்கெதிராக அரசை முடங்கச் செய்வோம்

## சுமந்திரனின் போராட்ட அறிவிப்புக்கு ஆதரவாக கஜேந்திரகுமாரும் ஆளும்தரப்புக்கு எச்சரிக்கை

அரசினால் மேற்கொள்ளபட்ட 30 வருட இனவாத ஒடுக்குமுறையின் காரணமாக இடம்பெயர்ந்த தமிழ் மக்களின் காணிகளை அரசு சூறையாட முயன்றுள்ளது. மார்ச் 28 வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பு நடைமுறைப்படுத்தப்படுமானால் அரசின் செயற்பாடுகளை முடங்கச் செய்வோம் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார்.

யாழ் கொக்குவில் பகுதியில் அமைந்துள்ள தமிழ் தேசிய மக்கள் முன்னணியின்தலைமைஅலுவலகத்தில் செய்தியாளர்களைச் சந்தித்தபோதே இதனைத் தெரிவித்தார்.

காணிகளை அரசுடமையாக்கும் ஆளும்தரப்பின் அறிவிப்புக்கு எதிராக தமிழ் அரசுக் கட்சி ஏற்கனவே போர்க் கொடி தூக்கியுள்ளது. மே 28 அல்லது அதற்கு முன்னதாக அரசின் அறிவிப்பு மீளப்பெறப்படவில்லை என்றால், ஜனாதிபதியை வடக்குக்குள் காலடி எடுத்து வைக்கவிடமாட்டோம் என்று தமிழ் அரசுக் கட்சியின் செயலாளர் சுமந்திரன்ஏற்கனவேஅறிவித்திருந்தார்.

அரசின் அறிவிப்பினால் பாதிக்கப்பட்டுள்ளமக்களைவெற்றிலைக்கேணியில் சென்று சந்தித்த பின்னர் அவர் இந்த அறிவிப்பை வெளியிட்டார். இந்தப் ☞8

## 339 மன்றங்களுக்காக இன்று வாக்குப் பதிவு

இலங்கையில் உள்ள 339 உள்ளூராட்சி மன்றங்களுக்கானதேர்தல்பணிகள்இன்று காலை 7 மணிக்குத் தொடங்குகின்றன. மாலை 4 மணிவரையும் வாக்களிப்பு இடம்பெறும். அதற்கான சகல ஏற்பாடுகளும் முழுமையடைந்துள்ளன என்று மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்கள் அறிவித்துள்ளனர்.

இன்றையவாக்களிப்புக்காக13ஆயிரத்து 759வாக்குச்சாவடிகள்திறக்கப்பட்டுள்ளன. நேற்று மாலையே இந்த வாக்களிப்பு நிலையங்களுக்கான வாக்குப் பெட்டிகள் உள்ளிட்ட பொருகள் எடுத்துச் செல்லப்பட்டு வாக்களிப்புக்குரிய தயார் நிலை ☞2

## வவுனியா டிப்போ மேலாளர் உட்பட இருவர் மறியலில்

### லஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் கைது

பயணி ஒருவருக்கு டிக்கெட் கொடுக்காமல் பணம் பெற்றுக்கொண்ட காரணத்தால் வேலையிலிருந்து நிறுத்தப்பட்ட பேருந்து நடத்துனருக்கு மீண்டும் பணி நியமன கடிதம் வழங்குவதற்காக ஒரு லட்சம் ரூபாய் லஞ்சம் பெற்றதாகக் கூறப்படும் வழக்கில், வவுனியா டிப்போவின் மூத்த மேலாளர் மற்றும் அலுவலக உதவியாளர் ஒருவரை ஜூன் 9 வரை விளக்கமறியலில் வைக்க கொழும்பு தலைமை நீதவான் தனுஜா லக்மாலி நேற்று உத்தரவிட்டார். ☞2

## வெலிக்கடை சிறையில் ரிவோல்வர் சிக்கியது

வெலிக்கடை சிறைச்சாலையின் எல். கட்டடத்திற்குப் பின்னால் கழிவுநீர் ஓடும் வடிகாலுக்கு அருகில் மண்ணை அகற்றும்போது 0.38 (சிறப்பு) ரிவால்வர் கண்டுபிடிக்கப்பட்டதாக சிறைச்சாலை ஊடகப் பேச்சாளரும் சிறைச்சாலை ☞8

## ஐரோப்பிய ஒன்றிய குழு சஜித்துடன் நேற்று பேச்சு

இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியக் குழுவினர் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவை நேற்றுச் சந்தித்துப்பேச்சுநடத்தினர். இலங்கைக்கு ஜிஎஸ்பி பிளஸ் வர்த்தகச் சலுகையை மீண்டும் வழங்குவது தொடர்பாக இந்தச் சந்திப்பில் ஆராயப்பட்டது. கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் சந்திப்பு இடம்பெற்றது.

இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் கார்மென் மொரேனோ (H.E. Carmen ☞2

## இன்று காலையில் வியட்நாமில் அநுர வெசாக் தின உரை

வியட்நாம் ஜனாதிபதி லுவோங் குவாங் இன் (Luong Cuong) அழைப்பின் பேரில் வியட்நாமிற்கு அரசுமுறைப்பயணமாகச் சென்றுள்ள ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, இன்று ஹோ சி மின் நகரில் ஆரம்பமாகும் 20 ஆவது ஐக்கிய நாடுகளின் வெசாக் தின கொண்டாட்டங்களில் பிரதம விருந்தினராகப் பங்கேற்றுபிரதானஉரையை நிகழ்த்த உள்ளார். ☞8


## தேர்தல் கடமையின்போது பெண் அதிகார் திடீர் சாவு

உள்ளூராட்சி சபைத் தேர்தல் கடமைகளுக்காக கண்டி, கண்ணொருவ, கனிஷ்ட வித்தியாலயத்திலுள்ள வாக்குச் சாவடியில் தேர்தல் கடமைக்காகச் சென்றபெண்ஒருவர், திடீர்சுகவீனம் ஏற்பட்டுஉயிரிழந்தார். கண்ணொருவ தாவர மரபணு வள மையத்தின் அபிவிருத்தி அதிகாரியான அவர் உடனடியாகப் பேராதனை ☞2

## மேலும் 4 மாணவர்கள் கைது

சப்ரகமுக பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மேலும் நான்கு மாணவர்கள் நேற்று மாலை கைது செய்யப்பட்டனர். இதே பல்கலைக்கழகத்தின் இரண்டாம் ஆண்டு மாணவன் ஒருவர் தற்கொலை செய்துகொள்ளுமளவிற்கு பகிடிவதை என்ற பெயரில் அவரைத் துன்புறுத்தினார்கள் என்ற குற்றச்சாட்டின் கீழ் தேடப்பட்ட இவர்கள் நேற்று சரணடைந்ததைத் தொடர்ந்து கைது செய்யப்பட்டனர்.

சமனலவேவ பொலிஸ்நிலையத்தில் இந்த நான்கு மாணவர்களும் ஒரு சட்டத்தரணி மூலம் சரணடைந்தனர். எனினும் இந்த வழக்கை தற்போது குற்றப் புலனாய்வுத் ☞8



## வேட்பாளர் மீது நேற்று தாக்குதல்

நெடுந்தீவு பிரதேச சபைக்கான தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் மீது நெடுந்தீவில் நேற்றுத் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. இதனால் காயமடைந்த அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். ☞2

## வியட்நாமுடன் 4 ஒப்பந்தங்களில் நேற்று கைச்சாத்திட்டது இலங்கை

இலங்கைக்கும் வியட்நாமுக்கும் இடையில் பல்வேறு துறைகள் சார்ந்த நான்கு புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் ஒரு இணக்கப்பாட்டு ஒப்பந்தமும், ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மற்றும் வியட்நாம் ஜனாதிபதி லுவோங் குவாங் முன்னிலையில் நேற்றுக் கைச்சாத்திடப்பட்டன என்று ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

வியட்நாம் ஜனாதிபதி மாளிகையில் நேற்று இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு பேச்சு தொடர்ந்து இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மற்றும் இணக்கப்பாட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டன.

இதன்போது, வியட்நாம் சோசலிச குடியரசுக்கும் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசுக்கும் இடையே சுங்க விவகாரங்களில் ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர உதவி தொடர்பாக உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

வியட்நாமின் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சுக்கும் இலங்கையின் கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சுக்கும் இடையிலான இயந்திர ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

பின்னால் உள்குத்து வேலைகள் இருப்பதாக ஆளும்தரப்பு உள் தகவல்கள் கூறுகின்றன.

போரின் முடிவில் புலிகளிடம் இருந்து பெருந்தொகைத் தங்கங்கள் மீட்கப்பட்டன என்றும் இவற்றை ராஜபக்சக்களும் சில படை உயரதிகாரிகளும் பங்கிட்டுக்கொண்டனர் என்றும் ஒரு வதந்தி அரசல் புரசலாக உண்டு. போர் முடிந்ததும் அது தொடர்பாக உருவாகிய பெரும் கதையாடல்களில் இதுவும் ஒன்றாகப் பின்னர் மறைந்துபோனாலும், புலி வாலைப் பிடித்த கதையாக, இந்த விடயத்தைத் தொடர்வதற்குத் தற்போதைய ஆளும்தரப்பு தீர்மானித்துள்ளதாகத் தெரிகிறது.

புலிகளிடமிருந்து தங்கங்கள் மீட்கப்பட்டதற்கான ஆதாரமான அவர்களின் வங்கியிலிருந்து மீட்கப்பட்ட இந்த நகைகள் உள்ளன. இதைஆதாரமாகவைத்துக்கொண்டு புலிகளிடமிருந்து மீட்கப்பட்ட தங்கத்தின் அளவு என்ன என்பது தொடர்பாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் தற்போது விசாரணைகளைத் தொடங்கியுள்ளனர். ஏற்கனவே ஒப்படைக்கப்பட்ட 10 ஆயிர் தங்க நகைகள் தொடர்பில் முழுமையான விசாரணை ஒன்றை நடத்துவதற்கு தமக்கு அனுமதி வழங்குமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் கொழும்புத் தலைமை நீதிவான் மன்றில் நேற்று மனுத் தாக்கல் செய்தனர். அதனடிப்படையில் தலைமை தீதிவான் தனுஜா லக் மாலி அதற்கான உத்தரவைப் பிறப்பித்தார். இலங்கை மத்திய வங்கி, தேசிய நகைகள் ஆணையம் மற்றும் பல அரசு நிறுவனங்களுக்கும் இது தொடர்பில் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

மேலும்இந்தவிவகாரத்துடன்தொடர்புடைய விசாரணைகளுக்குப்பொறுப்பான அனைத்து அரசு அதிகாரிகளின் பதிவுகளையும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவேண்டும் என்றும் அவர் உத்தரவிட்டார்.

தங்கப்பொருட்கள் தொடர்பான அனைத்து விசாரணைகளையும் நடத்திய பின்னர், அனைத்து தங்கப் பொருட்களையும் இலங்கை மத்திய வங்கியின் பெட்டகங்களில் சேமிக்கவும் நீதிபதி உத்தரவிட்டார்.

கிணறு வெட்டப் பூதம் கிளம்பிய கதையாக இந்த விவகாரம் வரும் காலத்தில் பூதாகாரம் எடுக்கும் என்பது ஆளும்தரப்பினரின் எதிர்பார்ப்பு. என்ன நடக்கிறது என்று பார்க்கலாம்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## காணிகளைச்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னணியில் கஜேந்திரகுமாரின் அறிவிப்பும் வெளியாகி உள்ளது. தமிழ் அரசுக் கட்சியின் அறிவிப்புக்கு ஆதரவு என்றோ, சுமந்திரனின் கருத்துக்கு ஆதரவு என்றோ கஜேந்திரகுமார் நேரடியாக அறிவிக்காதபோதும், இந்தப் பிரச்சினையில் இரு தரப்புக்களும் ஆளும்தரப்பை எதிர்த்துப் போராடுவது என்கிற ஒரே நிலைப்பாட்டை எடுத்துள்ளன.

கஜேந்திரகுமார் செய்தியாளர்களிடம் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

அண்மையில்வெளியிடப்பட்டவர்த்தமானி மூலம் அரச காணி அல்லாத தனியார் காணிகள் அனைத்தையும் அடையாளம் காணும்அடிப்படைமுயற்சிகளைஆளும்தரப்பு கட்டவிழ்த்துவிட்டுள்ளது

பிரித்தானிய இராச்சிய காலத்தில் பிரித்தானிய அரசு காணிகளைத் தமக்கு கீழ் கொண்டுவருவதற்காக உருவாக்கிய சட்டத்தைப் பயன்படுத்தி இன்று இந்த வர்த்தமானி அவசர அவசரமாகப் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது.

எமது நாட்டிலே கிட்டத்தட்ட 70 வருடங்களுக்கு மேலாக இனப்பிரச்சினை பூதாகரமாக வளர்த்து விடப்பட்டு, பின்னர் இப்போராட்டம்அரசினால்பயங்கரவாதமாகக கொச்சைபடுத்தப்பட்டு பயங்கரவாதத் தடுப்பு சட்டம் கொண்டுவரப்பட்டது. இருந்தும் இது போன்ற பல்வேறு சட்டமூலங்களைவைத்துகொண்டுதமிழர்கள் ஒடுக்கப்படுவதுபோனறே, இந்த வர்த்தமானி தமிழ் மக்களின் காணிகளை சுவீகரிக்கும் நோக்கில் வெளியிடப்பட்டுள்ளது.

தமிழீழமக்களின்அரைவாசிநிலப்பரப்பில் இந்த வர்த்தமானி பிரசுரிக்கப்பட்டுள்ளது. ஒரு லட்சம் மக்கள் போர்க் காலங்களில் அவசரமாக இந்தியாவிற்குத் தப்பிச்சென்று வாழ்ந்துவருகின்றனர். இவ்வாறானநிலையில் வடக்கில் வவுனியா மாவட்டத்தை தவிர ஏனைய கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய நான்கு மாவட்டங்களில் தனியார் காணிகளின் உரித்தை மூன்று மாத காலப் பகுதிக்குள் நிரூபிக்க முடியாது.

அரசினால் மேற்கொள்ளபட்ட 30 வருட இனவாத ஒடுக்குமுறைக்காக ஈழத்தமிழர்கள் புலம்பெயர்ந்தசூழல் உள்ளது. அந்த மக்களின் காணிகளை அரசு சூறையாட முயன்றுள்ளது. அந்த மக்கள் மூன்று மாத காலத்தினுள் இங்கே வந்து தமது காணிகளின் உரித்தை நிரூபிக்க முடியாது. அப்படிச் செய்வதற்காக அவர்கள் இலங்கை வந்தால் அவர்களுக்கு உயிர் உத்தரவாதம்கூடக் கிடையாது.

வடமாகாணத்தில் பல இடங்களில் இடம்பெயர்வு காரணமாக ஆவணங்கள் பல முள்ளிவாய்க்கால் உட்பட பல இடங்களில் காணாமல் போயுள்ளன. ஐந்து லட்சத்திற்கும் அதிகமான மக்கள் முள்ளிவாய்க்காலில் அனைத்தையுமே இழந்தார்கள். இன்று மக்கள் ஆவணங்களுக்கு அவர்கள் எங்கே போவார்கள்? ஆகவே இந்த வர்த்தமானியின் நோக்கத்தினை கேள்விக்கு உட்படுத்துகின்றோம்.

ஈழத் தமிழர்கள் புலம்பெயர்ந்த தமிழ் மக்களாக மேற்கு நாடுகளிலும் இந்தியாவிலும் வாழ்ந்து வருகின்றார்கள். அவர்கள் திட்டமிட்டு ஆறுதலாக அங்கு செல்லவில்லை மாறாக அவசர அவசரமாக தமது உயிரை பாதுகாக்க சட்டவிரோதமாகவே செல்வேண்டியிருந்தது. அப்படிபட்ட மக்கள் சொத்துக்களையோ ஆவணங்களையோகொண்டுபோகவில்லை. அப்படிபட்ட மக்களின் காணிகளை இந்த வர்த்தமானியின் மூலம் உடனடியாக நிரூபி என்றால் அது எப்படி முடியும்? இங்கே வசிக்கின்ற தமிழ் மக்களுக்கு இடையில் உள்ள புரிந்துணர்வின் அடிப்படையில் அது அயலவர்கள் மூலம் பேணப்பட்டது. ஆனால் மூன்று மாத காலத்தில் அதனை நிரூபிக்க முடியாது.

அரசு பயங்கரவாதிகள் எனக் கருதிய எமது தேசத்து உறவுகள் என்ன நம்பிக்கையுடன் இங்கே திரும்பி வந்து, தமது காணிகளின் உரித்துக்களைநிரூபிக்கமுடியும்? அவர்களின் பாதுகாப்பு இன்றும் கேள்வியாகத்தான் உள்ளது.

எங்களுடைய மக்கள் ஒருதடவை மட்டுமல்லபலதடவைகள்இடம்பெயர்ந்தார்கள் . உடுபுடவையுடன் மட்டுமே ஓடினார்கள்.

வயது முதிர்ந்த பலர் இந்த வர்த்தமானி தொடர்பில்அறியமுடியாதவர்களாகஉள்ளனர். ஆகவே இந்த வர்த்தமானியினை சட்டரீதியாக அணுகக்கூடிய அளவில் எங்கள் மக்கள் இல்லை. அப்படியிருந்தபோதும் அரசு இந்த வர்த்தமானியினை அவசர அவசரமாக வெளியிட்டதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இந்த வர்த்தமானியை உடனடியாக வாபஸ் பெறவேண்டும். ஆளும்தரப்பு இந்த வர்த்தமானி மீது காணி சுவீகிரிப்பு தொடர்பாக நடவடிக்கை எடுக்கக்கூடாது.

தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கு காணியே மூல காரணம். மாறி மாறி வரும் ஆளும்தரப்புக்கள் தமிழ் மக்களின் காணிகளை பறித்து சிங்களமயபடுத்தும் வரலாறுதான் இனப்பிரச்சினைக்கான மூல காரணம். அவ்வாறான நிலையில், தமிழ் மக்களின் பிரச்சினைக்கு புதிய அரசமைப்பு மூலம் தீர்வு காணப்படுவேண்டும் எனக் கருதும் இந்த ஆளும்தரப்பு, அதற்கு முன்னர் இந்த வர்த்தமானியினை வெளியிடுவதன் நோக்கம் என்ன? எங்களைப் பொறுத்தவரை இது முழுக்க முழுக்க அரசின் பேரினவாத பிரச்சினையை தொடர்ந்து பேணுகின்ற வழிமுறையே!

முதலில் இனப்பிரச்சினைக்குத் தீர்வினை வழங்கிய பின் இந்த விடயங்கள் தொடர்பில் சிந்திக்கலாம்.

தமிழ் தேசிய பேரவையின் பங்காளி கட்சிகளின் தலைவர்கள் இன்று கூடிப் பேசினோம். நாங்கள் விரைவாக சர்வதேச சமூகத்தின் தலைவர்களை நாடி முறையிட உள்ளோம். ஐக்கிய நாடுகள் சபையின் உயர் ஆணையரைச்சந்திக்கவுள்ளோம். விசேடமாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பாக அக்கறையாக இருக்கூடிய பிரிட்டன் தலைமையிலான ஆறு நாடுகளையும் நாம் சந்திப்போம். இந்தியாவில் எமது மக்கள் வாழ்வதால் அங்கு வாழும் மக்களின் காணிகளை கருத்திற் கொண்டு அந்த நாட்டுத் தூதுவரையும் நாம் சந்திக்கவுள்ளோம்.

காணிகளை அரசுடமையாக்கும் ஆளும்தரப்பின் திட்டத்தை எதிர்த்து புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள்,எமது வடகிழக்கு தமிழர்கள் இணைந்து அரசை முடங்கச் செய்வோம். ஆளும்தரப்பு தமிழ் மக்களின் போக்கிற்கு நேர்மாறாக எடுத்த முடிவாகவே நாம் இதனைக் கருதுகின்றோம் - என்றார்.

## 339 மன்றங்.....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இன்றையதேர்தலில்49அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் 257 சுயேச்சைக் குழுக்களைச் சேர்ந்த 75 ஆயிரத்து 589 வேட்பாளர்கள் போட்டியிடுககிறார்கள்.

வாக்குச் சாவடிகளிலும் பொதுமக்களின் பாதுகாப்பிற்காகவும் 65,000 பொலிஸார் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள் என்று காவல்துறை ஊடகப் பேச்சாளர் மூத்த காவல்துறை கண்காணிப்பாளர் புத்திக மனதுங்க தெரிவித்தார்.

காவல்துறை அதிகாரிகளில் 85 சதவீதத்திற்கும் அதிகமானோர் இந்தத் தேர்தல் பணிக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் எனவும் மனதுங்க கூறினார்.

இந்தத் தேர்தலைக் கண்காணிக்க 4 ஆயிரத்து 450 உள்ளூர் பார்வையாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இந்தஆண்டுதேர்தல்களைக்கண்காணிக்க கிட்டத்தட்ட 3000 பார்வையாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று பவ்ரல் தேர்தல் கண்காணிப்பு அலுவலகத்தின் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார். இதில் 800க்கும் மேற்பட்ட நடமாடும் பார்வையாளர்களும் அடங்குவர்.

கஃபே (ளீபுய்சி) அமைப்பும் 1250 பார்வையாளர்களை பணியில் அமர்த்தும் என்று அதன் நிர்வாக இயக்குநர் மனாஸ் மக்கீன் தெரிவித்தார்.

ஜனநாயக சீர்திருத்தங்கள் மற்றும் தேர்தல் ஆய்வுகள் நிறுவனத்தால் பணியமர்த்தப்பட்ட பார்வையாளர்களின் எண்ணிக்கை 200. ஐம்பது நடமாடும் கண்காணிப்பு வாகனங்களும் பணியில் ஈடுபடுத்தப்படும்.

இந்தத் தேர்தலில் வெளிநாட்டு பார்வையாளர்கள் யாரும் ஈடுபட மாட்டார்கள் என்று தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் தெரிவித்துள்ளன.

## தேர்தல்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதனா வைத்தியசாலைக்கு எடுத்து விரையப்பட்டபோதும் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

உயிரிழந்த கிருஷாந்தி குமாரி தசநாயக்க (வயது33)கலகெதரமினிகமுவவில்வசிப்பவர். தேர்தல் கடயை0ல் இருந்தபோது திடீரென சுகவீனமுற்ற அவர் சிகிச்சைக்காக மாலை 5 மணியளவில் பேராதனை போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

முழுமையான உடற்கூறாய்வுகளுக்குப் பின்னரே அவரது இறப்புக்கான காரணத்தை உறுதியாகக் கூற முடியும் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## ஐரோப்பிய....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

Moreno), ஐரோப்பிய ஒன்றியத்தின் தெற்காசியப் பிராந்தியத் தலைவர் சார்ள்ஸ் வைட்லே, ஐரோப்பிய ஒன்றியக் குழுவின் துணைத் தலைவர் லார்ஸ் பிரெடெல், ஐரோப்பிய ஆணையத்தின் கொள்கை அதிகாரி கைடோ டொலாரா, ஐரோப்பிய வெளி நடவடிக்கை சேவையின் இலங்கைக்கான பிரதிநிதி கலிஜா அகிசேவா, ஐரோப்பிய ஆணையத்தின் கொள்கை அதிகாரி பார்டோஸ் விளாடிஸ்லாவ் ஒட்டாச்செல் மற்றும் ஐரோப்பிய வெளி நடவடிக்கை சேவையின் கொள்கை அதிகாரி மைக்கேல் டோடினி உள்ளிட்டவர்கள் இச்சந்திப்பில் பங்கேற்றிருந்தனர்.

இலங்கையின் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் விவகாரங்கள் குறித்தும் பேச்சில் கவனம் செலுத்தப்பட்டது என்று எதிர்க்கட்சித்தலைவர் அலுவலகம் தெரிவித்தது. மேலும், றூறீஊண+ சலுகையை மேலும் மேம்படுத்துவதில் கவனம் செலுத்திய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, இலங்கையின் ஆடைகள் உட்பட ஏற்றுமதிப் பொருட்களுக்கு ஐரோப்பிய ஒன்றியத்தில் அதிக சந்தை வாய்ப்புகளைப் பெற்றுத் தருமாறும் கோரிக்கை விடுத்தார். நாட்டின் ஏற்றுமதி வருவாயை அதிகரிக்கவும், அமெரிக்கா நாட்டிற்கு ஏற்றுமதி செய்யும் பொருட்களுக்கு விதிக்கப்படும் 44% பரஸ்பர வரியின் தாக்கத்தைக் குறைப்பதற்கும் இதனால் முடியும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவப்படுத்தி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன, நாடாளுமன்ற உறுப்பினர்களான வைத்தியர் காவிந்த ஜயவர்தன, மரிக்கார், முஜிபுர் ரஹ்மான் மற்றும் பேராசிரியர் ஆனந்த ஜயவிக்ரம, பேராசிரியர் கெணடி குணவர்தன, பேராசிரியர் திருமதி சந்திமா விஜேகுணவர்தன, கலாநிதி மஹிம் மெண்டிஸ், கலாநிதி அதுலசிறி சமரகோன், கலாநிதி நதீஷா டி சில்வா, சுராங்க ரணசிங்க, குசும் விஜேதிலக மற்றும் திலும் அழகியவன்ன ஆகியோர் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

## வேட்பாளர்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முருகேசு அமிர்தமந்திரன் என்பவரே தாக்குதலுக்கு இலக்காகியுள்ளர். இவர் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிடுகிறார்.

தலையில் சிறு காயம் ஏற்பட்டுள்ள நிலையில் நெடுந்தீவு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் நெடுந்தீவு பிரதேச பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

## வவுனியா....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருகோணமலையிலிருந்து வவுனியாவுக்குச்செல்லும்பேருந்தில் இரண்டு பயணிகளிடமிருந்து பணம்பெற்றுக்கொண்டு அவர்களுக்கு டிக்கெட் கொடுக்காத சம்பவம் தொடர்பான விசாரணையைத் தொடர்ந்து, நடத்துனர் ஒருவர் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டார். அது தொடர்பான ஒழுக்காற்றுவிசாரணையும்தொடங்கப்பட்டது.

சம்பந்தப்பட்ட விசாரணையில் ஒழுங்கு அதிகாரியாகச் செயல்பட்ட வவுனியா டிப்போ மேலாளர், நடத்துனரை மீண்டும் பணி நியமனம் செய்ய லஞ்சம் பெற்றார் என்று லஞ்ச ஒழிப்பு ஆணையம் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

இரண்டாவது சந்தேகநபர் இலங்கை போக்குவரத்துச் சபையில் அலுவலக உதவியாளராகப்பணியாற்றியவர், பணத்தைப் பெற்று முதல் சந்தேகநபரிடம் ஒப்படைத்தவர் இரண்டாவது சந்தேகநபர்தான் என்று ஆணையம் தெரிவித்துள்ளது.

இலஞ்சஊழல்ஆணைக்குழு முன்வைத்த விடயங்களைப் பரிசீலித்த தலைமை நீதிவான், சந்தேகநபர்கள் இருவரையும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

## வியட்நாமுடன்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உற்பத்தி ஒத்துழைப்பு குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தம்,வியட்நாம் விவசாய விஞ்ஞான அகாடமிக்கும் இலங்கை விவசாயத் திணைக்களத்திற்கும் இடையிலான விவசாய ஒத்துழைப்பு குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தம், இலங்கையின் பண்டாரநாயக்க சர்வதேச இராஜதந்திர பயிற்சி நிறுவனத்திற்கும் வியட்நாமின் இராஜதந்திர அகாடமிக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம், மற்றும் வியட்நாம் வர்த்தக ஊக்குவிப்பு முகவர் நிறுவனத்திற்கும் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபைக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஆகிய ஒப்பந்தங்கள் (னிலிஷீ) கைச்சாத்திடப்பட்டன.

இந்த ஒப்பந்தங்கள் மூலம் நிபுணத்துவத்தைப் பகிர்ந்து கொள்ளல், இராஜதந்திரிகள், நிபுணர்கள், அதிகாரிகள், வல்லுநர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களின் பரிமாற்றம் அதேபோன்று, கல்வி மற்றும் ஆராய்ச்சி நிகழ்ச்சிகள், பல்வேறு பாடநெறிகள், கருத்தரங்குகள், இராஜதந்திரத் துறையில் ஏனைய கல்வி நடவடிக்கைகள் மற்றும் பயிற்சி தொடர்பான நிபுணத்துவத்தை ஒழுங்கமைக்கவும் பரிமாறிக்கொள்ள வசதிகளை ஏற்படுத்திக்கொள்ளவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இரு தரப்பினருக்கும் பொருத்தமான வர்த்தகத்தகவல் மற்றும் சந்தை நுண்ணறிவு பரிமாற்றம், இரு நாடுகளிலும் நடைபெறும் வர்த்தக கண்காட்சிகள் மற்றும் ஊக்குவிப்பு வாய்ப்புகளில் கூட்டுபங்கேற்பு மற்றும் வர்த்தக

தொடர்ச்சி 8 ம் பக்கம்.....

காலைக்கதிர் Kalaikkathir

# ஓ.எலில் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மேற்கு முதலிடம்

அண்மையில் வெளியாகிய கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப்பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் மூன்று பாடங்களிலும் சித்திபெற்ற மாணவர் சதவீதத்தின் அடிப்படையில் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயம் முதன்நிலையைப் பெற்று சாதனையை நிலைநாட்டியுள்ளது.

குறித்த வலயப்பாடசாலைகளில் இருந்து 429மாணவர்கள்பரீட்சைக்கு தோற்றி333மாணவர்கள் சித்திபெற்றிருக்கின்றனர். அவ்வடிப்;படையில் 77.6வீதமான சித்தி பெறப்பட்டுள்ளது. இதுவே கிழக்கு மாகாணத்தின் அதிக சித்திவீதமாகும். இரண்டாவது இடத்தினை 73.8சதவீதத்தினைப் பெற்று மட்டக்களப்பு மத்தி வலயமும், மூன்றாவது இடத்தினை 72.2வீதத்தினைப் பெற்று மூதூர்; கல்வி வலயமும் பெற்றுள்ளன.

இதேவேளை கலைப்பிரிவில் மாவட்டத்தில் இரண்டாம் நிலையை இவ்வலயத்திற்குட்பட்ட மாணவரொருவர் பெற்றுள்ளார். மொத்தமாக 17ஏ தர சித்திகள் பெறப்பட்டுள்ளதுடன், அதிகுறைந்த மாணவர்கள் மூன்று பாடங்களிலும் சித்திப்பெற தவறிய வலயம் என்ற சாதனையையும் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயம் பெற்றுள்ளமை எடுத்துக்காட்டத்தக்கது.

மாகாணத்தில் 1400மாணவர்கள் மூன்று பாடங்களிலும் சித்திபெற தவறியுள்ள நிலையில், மட்டக்களப்புமேற்குகல்விவலயத்தில்15மாணவர்களே மூன்று பாடங்களிலும் சித்திபெறத் தவறியுள்ளனர்.

அம்பாறையில் 229மாணவர்களும், கல்முனை கல்வி வலயத்தில் 140மாணவர்களும், மட்டக்களப்பு கல்வி வலயத்தில் 125மாணவர்களும் அக்கரைப்பற்று கல்வி வலயத்தில் 109மாணவர்களும் திருகோணமலை கல்வி வலயத்தில் 104மாணவர்களும் சித்திபெற தவறியுள்ளனர். இதனடிப்படையில் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தின் வளர்ச்சி பாராட்டப்பட வேண்டியதாகும்.

கஸ்ட, அதிகஸ்ட பாடசாலைகளை மட்டும் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இக்கல்வி வலயத்தில் எவ்விதமான தேசிய பாடசாலைகளும் இல்லை. இதேவேளை பாடங்களுக்கான ஆசிரியர் வெற்றிடம், பௌதீக வளத்தேவை, பொதுப்போக்குவரத்துத் தேவை, காட்டுவிலங்குகளின் தாக்கத்திற்கு அடிக்கடி உள்ளாகும் பாடசாலைகளை கொண்ட இவ்வலயம் இச்சாதனையை நிலைநாட்டியுள்ளமை எடுத்துக்காட்டனதாகும்.

இக்கல்வி வலயம் ஆரம்பிக்கப்பட்டு முதன்முறையாக 2010ஆம் ஆண்டு உயர்தரத்தில் கலைப்பிரிவில் மாத்திரமே மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றியிருந்தனர் அவ்வருடம் 71.59வீதமான சித்தியை இவ்வலயம் பெற்றுக்கொண்டது. 2012இல் கலை, வர்த்தகம் ஆகிய பிரிவுகளில் பரீட்சைக்கு இவ்வலயத்திற்குட்பட்ட மாணவர்கள் தோற்றினர். அவ்வருடத்தில் கலைப்பிரிவில் 40.51வீதமான சித்தியும், வர்த்தகப்பிரிவில் 100வீதமான சித்தியும் கிடைக்கப்பெற்றிருந்தது.

2014இல் விஞ்ஞானம், கணிதம், வர்த்தகம், கலை ஆகிய பிரிவுகளில் மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றினர். அவ்வருடத்தில் விஞ்ஞானப்பிரிவில் எந்தவொரு மாணவரும் சித்தியடையவில்லை. 2016இல் புதிதாக பொறியியல் தொழிநுட்ப பாடத்திற்கும் மாணவர்கள் இவ்வலயத்தில் இருந்து பரீட்சைக்கு தோற்றினர் அப்போது குறித்த பாடத்தில் 10வீதமான சித்தியே பெறப்பட்டிருந்தது. பின்னர் வந்த காலங்களில் உயர்தரத்தில் உள்ள அனைத்து பிரிவுகளிலும் மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றி வருகின்றனர்.

இவ்வலயத்தில் ஐந்து 1ஏபி பாடசாலைகளும், பதின்மூன்று 1சி பாடசாலைகளும் உள்ளன. கடந்த 2021ஆம் ஆண்டு இவ்வலயத்தின் உயர்தர சித்திவீதம் 71.19ஆகவும், 2022இல் 77.76வீதமாகவும், 2023இல் 73.99வீதமாவும் காணப்படுகின்றமை வலயத்தின் வளர்ச்சியை எடுத்துக்காட்டுகின்றது.

பல்வேறான வளப்பற்றாக்குறையுடன் பாடசாலைகள் இயங்கினாலும் அனைவரினதும் அர்ப்பணிப்பினாலேயே கிழக்கு மாகாணத்தில் இச்சாதனை நிலைநாட்டப்பட்டுள்ளது.

இதற்காகசித்திபெற்றமாணவர்களுக்கும்,அதற்காக உழைத்த பெற்றோர்கள், கற்பித்த ஆசிரியர்கள், வழிப்படுத்திய அதிபர்கள், ஆலோசணைகளைவழங்கிய ஆசிரிய ஆலோசகர்கள், உதவிக்கல்விப்பணிப்பாளர்கள், கோட்டக்கல்விப் பணிப்பாளர்கள், உத்திகள், வழிப்படுத்தல்கள், திட்டங்களை சரியாக வழங்கி நெறிப்படுத்திய பிரதிக்கல்விப்பணிப்பாளர்கள், புதிய செயற்பாடுகளையும், வழிகாட்டல் களையும், ஆலோசணைகளையும், நெறிப்படுத் தல்களையும், மேற்பார்வையினையும் சிறந்த தலைமைத்துவத்தினையும் வழங்கிய மட்டக்களப்பு மேற்குவலயக்கல்விப்பணிப்பாளர் யோ.ஜெயச்சந்திரன் ஆகியோருக்கும் மட்டக்களப்பு மேற்கு கல்வி சமூகத்தினர் நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டனர்.

## வவுனியாவில் 80 லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் மீட்பு

### நெளுக்குளம் பொலிஸார் அதிரடி

வவுனியாவில் 80 லட்சம் ரூபாய் பெறுமதியான 35 பவுன் தங்க நகைகளை மீட்டுள்ளதாக நெளுக்குளம் பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.

கடந்த இரு தினங்களுக்கு முன்பாக வவுனியா, கணேசபுரம் பகுதியில் உள்ள வீட்டில் இருந்து 35 பவுண் தங்க நகைகள் திருடப்பட்டிருந்தது.

இச்சம்பவம் தொடர்பில் நெளுக்குளம் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய, நெளுக்குளம் பொலிஸ் பொறுப்பதிகாரி டி.எம்.ஏ.சமரகோன் தலைமையில் உப பொலிஸ் அதிகாரி எஸ்.எஸ்.வீரசிங்க, பொலிஸ் கொஸ்தாபிள்களான நிரோஜன், தீபன் அடங்கிய குழுவினரால் விசேட நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இநநிலையில் இந்தச் சம்பவம் தொடர்பில் வவுனியா, கொக்குவெளி பகுதியில் வைத்து 29 வயது இளைஞன் ஒருவரை கைது செய்துள்ளதுடன், அவரிடம் இருந்து 35 பவுண் நகைகளும் மீட்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நெளுக்குளம் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், சந்தேக நபரினை நீதிமன்றத்தில் முற்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 100



## சிறிசபாரத்தினம் நினைவு தினத்தினை முன்னிட்டு வவுனியாவில் இரத்ததானம்



தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவர் சிறிசபாரத்தினம் அவர்களின் 39 ஆவது நினைவேந்தல் தினத்தை முன்னிட்டு வவுனியா பொதுவைத்தியசாலை இரத்த வங்கியில் நேற்று (திங்கட்கிழமை) இரத்ததானம் இடம்பெற்றது.

'உதிரம் கொடுப்போம் உயிர் காப்போம்' எனும் தொனிப்பொருளில் வவுனியாவில் சிறி தமிழ் ஈழ விடுதலை (சிறிரெலோ) இயக்கத்தின் செயலாளர் நாயகம் ப.உதயராசா அவர்களின் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட இந்த இரத்ததான முகாமில் 15 இற்கு மேற்பட்டவர்கள் கலந்துகொண்டு இரத்ததானம் வழங்கினர். 100

## உள்ளூராட்சி தேர்தல் தொடர்பில் வவுனியாவில் 74 முறைப்பாடுகள்



தேர்தல் விதிமுறை மீறல் தொடர்பில் இதுவரை 74 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என வவுனியா மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர் பீ.ஏ.சரத்சந்திர தெரிவித்துள்ளார்.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் வவுனியாவில் கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகள் தொடர்பில் நேற்று (திங்கட்கிழமை) கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

வவுனியாமாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தியாகியுள்ளன. இதுவரை எந்தவித குழப்பங்களும்இன்றி அமைதியானமுறையில் தேர்தல் செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளன.

இதுவரைக்கும் 74 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. அவை தொடர்பில்

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஜனநாயகத்தின் அடித்தளம் ; வாக்களிப்பு கடமையும் உரிமையும்

இராஜதந்திரத்தின் அடிப்படையும், மக்கள் ஆட்சி என்றஆழ்ந்தகருத்தையும்உறுதிப்படுத்தும்வாய்ப்பாக உள்ளூராட்சி சபைத் தேர்தல் இன்று நடைபெறுகிறது. நாட்டின் மிக அடிப்படை நிர்வாகத்தை உருவாக்கும் உள்ளூராட்சி அமைப்புகள், பொதுமக்களின் அன்றாட வாழ்வை நேரடியாக பாதிக்கும் அதிகாரங்களை வகிக்கின்றன. குடிதண்ணீர்வசதி, தெருவிளக்குகள், கழிவுநீர் மேலாண்மை, சுகாதாரக் கட்டுப்பாடுகள், பேருந்து நிறுத்தங்கள், நகர வர்த்தக வசதிகள் உள்ளிட்ட ஒவ்வொரு விடயத்திலும் உள்ளாட்சியின் பங்கு அதிகம்.

அதனால்தான், இந்தத் தேர்தலில் வாக்களிப்பது என்பது வெறும் உரிமை என்பதோடன்றி, ஒரு கடமையாகவும் பார்க்கப்பட வேண்டும். நாம் தேர்ந்தெடுக்கும் உறுப்பினர்கள், எதிர்வரும் நான்கு ஆண்டுகளுக்கு நம் பகுதிகளை நிர்வகிக்கின்றனர். அவர்கள்செயலற்றோராகஇருந்தால், அதன்தாக்கம் நேரடியாகநம்வாழ்விலும், நம்மக்களின்நலனிலும் படிகிறது. எனவே, முடிவுகளை முறைப்படுத்த, மாற்றங்களை கொண்டு வர, பழைய பிழைகளை திருத்த – வாக்களிப்பின் வாயிலாகவே நாம் ஒவ்வொருவரும் நம் பங்களிப்பை வழங்கவேண்டும். வடக்கு கிழக்கைப் பொறுத்தவரையில் அவர்கள் நல்லவர்களாக மட்டுமல்ல, தமிழர் உரிமைகளை வலியுறுத்துபவர்களாகவும் கொழும்பு அரசின் சொற்கேள் குடிகளாக அல்லாதவர்களாகவும் இருக்கவேண்டும்.

இலங்கையின் பொதுவாக, உள்ளூராட்சி தேர்தல்களில் வாக்களிப்பு வீதம் ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களுடன் ஒப்பிடும்போது மிகக் குறைவாகவே காணப்படுகிறது. இது ஜனநாயகத்திற்கு ஒரு பெரிய இடராக உள்ளது. மக்கள் அரசியலில் ஈடுபடாத எண்ணத்தோடு இருப்பதும், ஒரு வாக்கால் என்ன மாறப்போகிறது என்ற தவறான நம்பிக்கையும் இதற்குப் பின்னணி. ஆனால் உண்மை என்னவென்றால், ஒரு வாக்கும் முக்கியமானதுதான். ஒவ்வொரு வாக்கும் ஒரு குரலாகும். அந்தக் குரலே மாற்றத்தின் தூண்டிலாக அமைகிறது.

இன்றையதேர்தலில், ஊழல்குறைந்த, பணிபுரியும் மனப்பான்மை கொண்ட, மக்களுடன் நேரடித் தொடர்பு வைத்திருக்கும் சிறந்த வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்கவேண்டும். அவர்கள் தமிழ் இன உணர்வாளர்களாகவும்இருக்கவேண்டும். உறவுநிலை, சாதி, மதம் அல்லது கட்சி அடிப்படையில் அல்லாது, நலனில் நிலைத்து வைக்கும் மையத்திலிருந்து தான் முடிவு எடுக்கப்படவேண்டும்.

மக்கள் அனைவரும், வயதானவர்களும், இளைஞர்களும், முதியோர்களும் – அனைவரும் இன்று வாக்களிக்க உரிய இடத்திற்கு சென்று, தங்கள் வாக்கை பதிவு செய்ய வேண்டும். இது ஒரு பொது கடமை. நல்ல நிர்வாகத்திற்கான தொடக்க நாள் இன்று. அதை சாத்தியமாக்குவோம்.

# கல்முனை வலய எல்லே சம்பியனாக நிந்தவூர் அல்–அஷ்றக் பாடசாலை

(ஸாகிர்)

காரைதீவு விபுலானந்த மத்திய கல்லூரி மைதானத்தில்நடைபெற்றகல்முனைவலயப் பாடசாலைகளுக்கு இடையிலான எல்லே போட்டியில் 20 வயது ஆண்கள் பிரிவில் நிந்தவூர் அல்-அஷ்றக் தேசிய பாடசாலை அணி கல்முனை சாஹிராக் கல்லூரி, கல்முனை உவெஸ்லி ஆகிய அணிகளை எதிர்கொண்டு வெற்றி பெற்று, இறுதிப் போட்டியில் காரைதீவு விபுலானந்த மத்திய கல்லூரி அணியை எதிர்த்தாடி வெற்றி பெற்று, இவ்வருடத்திற்கான சம்பியன் பட்டத்தை சுவீகரித்துக்கொண்டது.

வெற்றி பெற்ற வீரர்களுக்கு இந்த வெற்றிக்காக ஆலோசனை வழிகாட்டலை வழங்கிய கல்லூரி முதல்வர் ஏ. அப்துல் கபூர் அவர்கள் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதோடு,

அவர்களுக்கான பயிற்சிகளை வழங்கிய பாடசாலை கிரிக்கெட் பொறுப்பாசிரியர் எம்.எஸ்.எம். சாபீர், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் ஐ.எம்.எஸ். இன்பாத் மௌலானா ஆகியோருக்கும்

ஏனைய உடற்கல்வி ஆசிரியர்களான ரீ.எம்.தன்ஸீப், எம்.ஏ.எம். ஹிஜாஸ் அன்வர், எம்.எம்.எம். ஹாஸிக்,

விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியர் எம்.ஐ. முஹம்மட் அஸ்மி, இணைப்பாடவிதானத்துக்கு பொறுப்பான உதவி அதிபர் எம்.எம்.எம். உவைஸ், ஏனைய பிரதி உதவி அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மற்றும் வீரர்களின் பெற்றோர்கள் ஆகியோருக்கும் அஷ்ரக்கியன் சமூகம் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றது.

# அட்டாளைச்சேனை ஸஹ்றா வித்தியாலயத்திற்கு ஹரீஸின் நிதியல் ஸ்மார்ட் போர்டு கையளிப்பு

(நூருல் ஹுதா உமர்)

அட்டாளைச்சேனை பிரதேச மாணவர்களின் கல்வியில் அக்கறை கொண்ட பாடசாலைகளில் ஒன்றாக திகழும் அட்டாளைச்சேனை கல்முனை அட்டாளைச்சேனை ஸஹ்றா வித்தியாலய மாணவர்களின் நலன்கருதி முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸ் அவர்களின் ரி - 100 திட்டத்தின்கீழ்ஒதுக்கீடுசெய்யப்பட்ட சுமார் 10 லட்சம் ரூபா விசேட நிதி ஒதுக்கீட்டின் மூலம் பாடசாலை மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கு தேவையான ஸ்மார்ட் போர்டு மற்றும் பாடசாலை கற்றல், கற்பித்தல் உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்தன.

அட்டாளைச்சேனைஸஹ்றாவித்தியாலய அதிபர் ஏ.எல். அஜ்மல் தலைமையிலான பாடசாலை சமூகத்தை சந்தித்து பாடசாலை அபிவிருத்தி பணிகள், கல்வி மேம்பாட்டு விடயங்களை பற்றி கலந்துரையாடிய முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸ் அவர்கள் தனது நிதி ஒதுக்கீட்டில் வழங்கப்பட்ட ஸ்மார்ட் போர்டு மற்றும் பாடசாலை கற்றல், கற்பித்தல் உபகரணங்களை பார்வையிட்டதுடன் அடுத்தகட்ட பணிகளுக்குத் தேவையான ஒழுங்குகள் தொடர்பிலும் கலந்துரையாடினார்.

இதன்போது மாணவர்களின் விளையாட்டுத் துறை, கல்வி மற்றும் கல்விசாரா விடயங்களின் அடைவுகள் மேம்பாட்டு விடயங்கள் பற்றியும் ஆராய்ந்தார்.

இந்த விஜயத்தில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸ் அவர்களின் ஆலோசகர் எம்.ஜே.எம். அன்வர் நௌஸாத், வெகுஜன மக்கள் தொடர்பாடல் செயலாளர் யூ.எல். நூருல் ஹுதா உட்பட முன்னாள் எம்.பி. ஹரீஸ் அவர்களின் இணைப்பாளர்கள், பாடசாலை உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இந்த விஜயத்தின் போது இப்பாடசாலையின் தேவைகளை நிவர்த்தி செய்வதில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸ் அவர்களது பங்களிப்பு தொடர்பில்சிலாகித்த பாடசாலை அதிபர் அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் வழங்கிய ஒத்துழைப்புக்கும், தொடர்ச்சியான சேவைகளுக்கும் நன்றிகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்தார்.





காலைக்கதிர் Kalaikkathir

# மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து இம்முறை 455,520 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்

(சக்திவேல்)

12 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் நடைபெறஉள்ளது.மட்டக்களப்புமாவட்டத்திலிருந்து இம்முறை 455,520 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். வாக்களிப்பதற்காக மட்டக்களப்பு மாவட்டத்தில் இம்முறை 477 வாக்களிப்பு நிலையங்கள் ஒழுங்கமைப்பு செய்யப்பட்டுள்ளதான மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும், மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரியுமான திருமதி ஜே.ஜே.முரளிதரன் தெரிவித்துள்ளார். இதன்விடயம் தொடர்பில் திங்கட்கிழமை ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்...

நடைபெற இருக்கும் உள்ளூர் அதிகார சபை தேர்தலுக்கானசகபூர்வாங்கப்பணிகளும்மட்டக்களப்பு மாவட்டத்தில் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன. இம்முறை சுமார் 6000 அரசாங்க உத்தியோகஸ்தர்கள் இந்த தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அது மாத்திரம் இன்றி பொலிஸ் மற்றும் இராணுவ உத்தியோகஸ்தர்களும் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. அவர்களுக்கான தெளிவூட்டல்கள் மற்றம் வழிகாட்டல் வகுப்புகள் அனைத்தும் முடிவுற்ற நிலையில் திங்கட்கிழமை வாக்குச்சாவடிகளுக்கான வாக்குப்பெட்டிகள் சிரேஷ்ட தலைமை தாங்கும் உத்தியோகத்தர்களால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

இம்முறை மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டக்களப்பு மாநகர சபை காத்தான்குடி மற்றும் நகர சபை மற்றும் ஏனைய ஒன்பது பிரதேச சபைகள் அடங்கலாக 12 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் நடைபெற உள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து இம்முறை 455,520 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். வாக்களிப்பதற்காக மட்டக்களப்பு மாவட்டத்தில் இம்முறை 477 வாக்களிப்பு நிலையங்கள் ஒழுங்கமைப்பு செய்யப்பட்டுள்ளன.

எனவே செவ்வாய்கிழமை நடைபெறும் வாக்களிப்புக்காக காலை ஏழு மணி முதல் பொதுமக்கள் வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று வாக்களிக்கலாம்.

வாக்களிப்புநடவடிக்கைகள்செவ்வாய்கிழமை பிற்பகல் 4 மணிக்கு முடிவடையும். அதன் பின்னர் 4.30 மணியிலிருந்து வாக்கெண்ணும் பணிகள் ஆரம்பமாகும். வாக்கெண்ணும் பணிகளுக்காக 144 நிலையங்கள் ஆயத்துப்படுத்துப்பட்டுள்ளன. இதுவரை மட்டக்களப்பு மாவட்டத்தில் எந்த ஒரு தேர்தல் வன்முறை சம்பவங்களும் பதிவாகவில்லை



தேர்தல் விதிமுறை சம்பவங்கள் 353 சம்பவங்கள் பதிவாகிஉள்ளனஎன அவர் இதன்போது தெரிவித்தார்.

# ஊர்காவற்றுறை இறங்குத்துறைக்கு அமைச்சர் கண்காணிப்புப் பயணம்

யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை கண்ணகை அம்மன் கோவில் இறங்குத்துறைக்கு கண்காணிப்பு பயணமொன்றை அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் மேற்கொண்டிருந்தார்.

மக்களை சந்தித்து கலந்துரையாடி, அவர்களின் கோரிக்கைகள் தொடர்பில் கேட்டுஅறிந்தார்.

இதன்போது பாலத்தில் வெடிப்பு ஏற்பட்டுள்ளதாகவும், மக்கள் பயன்பாட்டுக்கு உகந்ததாக அது இல்லை எனவும் சுட்டிக்காட்டிய மக்கள், இதனை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்தனர்.

மக்களின் கோரிக்கைகளை ஏற்ற அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் இறங்குத்துறையை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்தார். இதற்குரிய ஆரம்பக்கட்ட



பணிகள் விரைவில் ஆரம்பமாகவுள்ளன.




காலைக்கதிர் Kalaikkathir

# சட்டவிரோத பரப்புரை நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கையாம்

இடம்பெற உள்ள உள்ளூர் அதிகார சபை தேர்தல் தொடர்பில் திங்கட்கிழமை இடம் பெற்றஊடக சந்திப்பிலேயே மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் இவ்வாறு கருத்துதெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஞாயிற்றுக்கிழமை இரவு கழுவாஞ்ச் குடியில் சட்டவிரோதமாக கொண்டு செல்லப்பட்ட அரிசிதொடர்பாககளுவாஞ்சி குடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

வேட்பாளர்கள் மற்றும் வாக்காளர்கள் தேர்தல் சட்ட விதிகளை மதித்து நடக்க வேண்டும். பொதுமக்கள் நேரகாலத்துடன் வாக்களித்து விட்டு தங்களது வீடுகளுக்கு செல்லுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இதேவேளை மாவட்டத்தின் தேர்தல் பாதுகாப்பு பணிகளுக்காக 1500 இற்கும் மேற்பட்ட பொலிஸாரும் 87 பொலிஸ் ரோந்துநடவடிக்கைகளும்முன்னெடுக்கப்பட உள்ளன.

இம்முறை விசேட தேவையுடையவர்களுக்காக கண்பார்வை அற்றோர்களுக்காக சிறப்பு வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தேர்தல் கண்காணிப்பு பணிகளுக்காக உள்நாட்டு, வெளிநாட்டு, கண்காணிப்பாளர்களுடன் தேர்தல் கண்காணிப்புரோந்துபணிகளும்இடம்பெற உள்ளன. - என்றார்.

# ஜனாதிபதி செயலக இரண்டாம் கட்ட நிதியுதவி வழங்கி வைப்பு

(சர்ஜுன் லாபீர்)

ஜனாதிபதி செயலகத்தினால் சத்திர சிகிச்சை மற்றும் மருத்துவ உதவிகளுக்காக வழங்கப்பட்டு வரும் நிதியுதவி இம்முறை நிகழ்நிலை மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டு அதன் அடிப்படையில் தெரிவு செய்யப்படுபவர்களுக்கு இவ்வுதவி வழங்கப்படுகின்றது.

ஜனாதிபதி செயலகத்தின் கோரிக்கைக்கமைய பிரதேசசெயலகங்களின் ஊடாக நிகழ்நிலை அடிப்படையில் விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்பட்டு அதன் அடிப்படையில் தெரிவுகள் இடம்பெறுகின்றன.

அந்தவகையில்அம்பாறைமாவட்டத்தில் முதன்முதலாக சம்மாந்துறை பிரதேச செயலகத்தால் அனுப்பி வைக்கப்பட்ட நான்கு நிகழ்நிலை விண்ணப்பங்களிலிருந்து இரண்டாம் கட்டமாக மூவர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கான நிதியுதவி வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிதியுதவி வழங்கி வைக்கும் நிகழ்வு சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மது ஹனீபா தலைமையில் நேற்று(செவ்வாய்க்கிழமை) பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

அம்பாறை மாவட்ட பிரதம கணக்காளர் ஏ.எல் மஹ்ரூப் பிரதம அதிதியாக கலந்து கொண்டு இந்த மருத்துவ உதவிற்கான காசோலைகளை வழங்கி வைத்தார்.

இந் நிகழ்வில் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் யூ.எம் அஸ்லம், கணக்காளர் எஸ்.எல் சர்தார் மிர்ஸா, சமூக சேவை உத்தியோகத்தர் ஏ.எம்.எம் சாபிர், கிராம நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.எம் நளீர், அபிவிருத்தி உத்தியோகத்தர் முஹம்மட் ரிபாஸ், கிராம சேவை உத்தியோகத்தர் ஜே.சாம் டிலோஜன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவுற்குட்பட்ட விளினியடி-03 ஐச் சேர்ந்த யூ.எல் உமர் கர்தா,விளினியடி -02ஐச் சேர்ந்த வை.எல் அலிமா உம்மா,சம்மாந்துறை-01ஐச் சேர்ந்த ஏ.மஔஹமூத்லெவ்வை என்பவர்களுக்கு மேற்படி ஜனாதிபதி செயலகநிதியுதவிவழங்கிவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.








# தேர்தல் சுவரொட்டிகள் கிளிநொச்சியில் அகற்றம்

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ளூராட்சி பிரசாரங்கள் நிறைவுக்கு வந்தமையை அடுத்து பொலீஸார் வீதிகளில் பொது இடங்களில் ஒட்டப்பட்டுள்ள பெனர்கள் மற்றும் கட்டவுட்களைசுவரொட்டிகள் அகற்றி விடுகின்றனர்.



# ஆதார வைத்தியசாலை கட்டடத்தில் தீப் பரவல்

## வாழைச்சேனையில் துயரம்

(பர்ஸான்)

வாழைச்சேனை ஆதார வைத்தியசாலை கட்டடம் ஒன்றில் நேற்று (திங்கட்கிழமை) தீ விபத்தொன்று இடம்பெற்றுள்ளது.

வைத்தியசாலையின் பழைய எக்ஸ்ரே கட்டடத்தில் இந்தத் தீப்பரவல் இடம்பெற்றுள்ளது.

மின் ஒழுக்கு காரணமாக இந்த தீப்பரவல் ஏற்பட்டிருக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.

வாழைச்சேனை ஆதார வைத்தியசாலை நிருவாகம் எடுத்த முயற்சியில் ஓட்டமாவடி, வாழைச்சேனை பிரதேச சபை மற்றும் மட்டக்களப்பு தீயணைக்கும் படையினரின் ஒத்துழைப்புகளுடன் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

இதில், வைத்தியசாலை உபகரணங்கள் பல தீயில் எரிந்துள்ளன.



# நூதன முறையில் கசிப்பு கடத்தியவர் கைதானார்



மதர்மபுரம் பொலீஸ் பிரிவுக்கு உட்பட்ட புளியம்பொக்கணைபகுதியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிபயணித்தபஸ்ஸில்22 லீற்றர்கசிப்பினைநுதனமான முறையில் பயண பையில் மறைத்துகசிப்பினை எடுத்துச் செல்ல முற்பட்ட யாழ்ப்பாண பகுதியைச் சேர்ந்த சந்தேக நபர் ஒருவர் தர்மபுரம் பொலீஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக கைது திங்கட்கிழமை செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கிளிநொச்சி நீதிமன்றம் முட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தர்மபுர பொலீஸ்நிலைய பொறுப்பதிகாரி டி.எம்.சதுரங்க தெரிவித்துள்ளார்.

316

# திருகோணமலை றொட்டறி கழக 46 ஆவது தொடக்க ஆண்டு விழா

46 ஆவது 'தொடக்க ஆண்டு' விழா 03 மே 2025 அன்று மாலை 06.30 மணிக்கு திருகோணமலை ரோட்டரி இல்லத்தில் நடைபெற்றது.

2026-27 ஆம் ஆண்டிற்கான தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட ஆளுநர்குமார்சுந்தரராஜ்தலைமை விருந்தினராக கலந்து கொண்டார்.

தலைவர் எஸ்.ஜெகதீஸ்வரன் அனைவரையும் வரவேற்றார்.

மறைந்த முன்னாள் ரோட்டரி அங்கத்தவர்களை நினைவு கூறப் பட்டார்கள்.

திருகோணமலை ரோட்டரி கழகத்தின் முன்னாள் பொதுசன தொடர்பாளர் டாக்டர் ஞானகுணாளன்திருகோணமலைரோட்டரி கழகத்தின் வரலாற்றையும், நடவடிக்கைகளையும் எடுத்துக் கூறினார்.

25 ஆண்டுகளுக்கும் மேலாக சுயநலத்திற்கு அப்பாற்பட்டு சேவை செய்த பன்னிரண்டு சிறந்த ரோட்டரி அங்கத்தவர்களை கௌரவிக்கப்பட்டனர்.



ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில்தேர்வுமுடிவுகளில் சிறந்து விளங்கிய தி.சண்முகா இந்து மகளிர் கல்லூரியை சேர்ந்த ஸ்ரீகுமார் டிலுக்சனா அவர்களுக்கு றொக்கப் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டது.

மூன்று பயனாளிகளுக்கு சுயதொழில் செய்வதற்கான சைக்கிள் பிரதம விருந்தினரால் வழங்கப்பட்டன.

2026-27 ஆம் ஆண்டிற்கான தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட ஆளுநர் குமார் சுந்தரராஜ் திருகோணமலை ரோட்டரியின் எதிர்காலத் திட்டங்கள் குறித்த முக்கிய உரையை நிகழ்த்தினார்.

அடுத்த வருட தலைவர் கே. பிரபாகரன் நன்றி உரை நிகழ்தினார்.








## வியட்நாமுடன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதிநிதிகளுக்கு இடையே சந்திப்புகளை ஏற்பாடு செய்தல் உள்ளிட்ட பரந்த அளவில் வர்த்தக ஊக்குவிப்பு நடவடிக்கைகளுக்கு இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் பல்வேறு வகையான வாய்ப்புகளை வழங்கும்.

இந்த இணக்கப்பாடுகள் ஊடாக குறிப்பாக பதப்படுத்தப்பட்ட உணவுகள், கடற்றொழில் நடவடிக்கைகள், ஆடைக் கைத்தொழில் மற்றும் பெறுமதி கூட்டப்பட்ட விவசாயத்திற்கு குறிப்பிடத்தக்க சந்தை வாய்ப்புகளை இரு நாடுகளுக்கும் வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## வெலிக்கடை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆணையருமான காமினி திசாநாயக்க தெரிவித்தார்.

பொரளை பொலிஸாருக்கு கிடைத்த புகாரைத் தொடர்ந்து வந்த அதிகாரிகள் இந்த விவகாரம் குறித்து விசாரணையைத் தொடங்கியுள்ளனர் எனவும், வெலிக்கடை சிறைச்சாலையாலும் விசாரணை தொடங்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த ரிவால்வர் பல ஆண்டுகளாக பொலிஸாரின் பயன்பாட்டில் இருந்த ஒன்று என்பதும் தெரியவந்துள்ளது. மேலும் மேலதிக விசாரணைக்காக பொலிஸாரிடம் அந்தத் துப்பாக்கி ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## மேலும் 4.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திணைக்களத்தினரே (சிஐடி) விசாரித்து வருகின்றனர் என்பதனால் சரணடைந்த நான்கு மாணவர்களும் அவர்களால் கைது செய்யப்பட்டனர். இந்த நான்கு மாணவர்களும் இன்று பலங்கொட நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளனர்.

இந்த வழக்கில் ஏற்கனவே கைது செய்யப்பட்ட நான்கு மாணவர்களையும் நேற்று நீதிமன்றத்தில் முற்படுத்தியபோது அவர்களை மே 16 வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

## இன்று....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை நேரப்படி காலை 7.40 மணியளவில் ஜனாதிபதியின் உரை இடம்பெறும். இந்த உரை உள்ளூராட்சித் தேர்தலுக்குப் பின்னர் மாலை 5:00 மணிக்கு தொலைக்காட்சிகளில் ஒளிபரப்புச் செய்யப்படவுள்ளது.

'மனித கண்ணியத்திற்கான ஒத்துழைப்பு மற்றும் சகிப்புத்தன்மை: உலக அமைதி மற்றும் நிலையான வளர்ச்சிக்கான பௌத்த புரிதல்' என்ற தொனிப் பொருளில் இன்று தொடங்கும் ஐக்கிய நாடுகளின் வெசாக் கொண்டாட்டம் மே 8 வரை நடைபெறவுள்ளது. இலங்கை, இந்தியா, நேபாளம், லாவோஸ் மற்றும் கம்போடியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த உயர்மட்ட பிரதிநிதிகள் மற்றும் நாடுகள் மற்றும் 85 பிரதேசங்களைச் சேர்ந்த சுமார் 2,800 பேர் இதில் கலந்துகொள்கின்றனர்.

# வவுனியாவில் வேட்பாளருக்கு அச்சுறுத்தலாம்

*வவுனியாவில் வேட்பாளர் ஒருவர் தனக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸ் நிலையத்தில் நேற்று முறைபாடு செய்தார்.*

*வவுனியா மாநகர சபையில், வைரவபுளியங்குளம் வட்டாரத்தில் போட்டியிடும் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் ஒருவரே தனக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்துள்ளார். (100)*

# சீர்திருத்தப் பள்ளியிலிருந்து தப்பிய மாணவன் சிக்கினார்

யாழ். மாவட்டம் அச்சுவேலி சீர்திருத்தப் பள்ளியில் இருந்து தப்பி ஓடிய மாணவன் வவுனியாவில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ். அச்சுவேலிப் பகுதியில் உள்ள சீர்திருத்தப் பள்ளியில் இருந்து தப்பி வந்த குறித்த மாணவன் வவுனியாவில் உள்ள தனது நண்பர் ஒருவரிடம் தொடர்புகொண்டு வவுனியாவிற்கு வந்துள்ளார். ஆனால், வவுனியாவிற்கு வந்த பின் நண்பனுடன் தொடர்பை ஏற்படுத்த-முடியவில்லை.

இதனால் செய்வதறியாத நிலையில் வவுனியா பழைய பேரூந்து நிலையத்தில் சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடியபோது அங்கிருந்தவர்கள் செய்தியாளர்களுக்குத் தகவல் தெரிவித்தனர்.

செய்தியாளர்கள் மாணவனுடன் பேச்சுக் கொடுத்ததில் அச்சுவேலி பகுதியில் உள்ள சிறுவர் சீர்திருத்த பள்ளியில் அவர் இருந்து தப்பிவந்தமை தெரியவந்தது. இதனையடுத்து, வவுனியாப் பொலிஸாரிடம் மாணவன் ஒப்படைக்கப்பட்டார். 100

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com






# வாகனத்தில் கொண்டு சென்ற அரிசி மூடைகள் விரைந்த தேல்தல் அதிகாரிகளும் பொலிஸும்

(சக்திவேல்)

மட்டக்களப்புமாவட்டம்களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குருக்கள்மடம் பிரதான வீதியில் வட்டா ரக வாகனத்தில் ஒருதொகுதி அரிமூடைகள் கொண்டு செல்லப்படுவதாகவும், அது தோ்தலுக்காக மக்களுக்கு பகிர்ந்தழிக்கப்படுவதற்காக இருக்கலாம் என தோ்தல் திணைக்களத்தின் மட்டக்களப்பு அலுவலகத்திற்கு கிடைத்த முறைப்பாடுகளுக்கு அமைய உடன் விரைந்து செற்பட்ட தேல்தல் திணைக்கள அதிகாரிகள் ஞாயிற்றுக்கிழமை இரவு உரிய வாகனத்தை அவதானித்துள்ளனர்.

பின்னர் அசிரி மூடைகளை ஏற்றிக் கொண்டு சென்ற வாகனத்தையும், உரிய சாரதியையும் அழைத்துக் கொண்டு களுவாஞ்சிகுடி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

இதனை விசாரித்த பொலிஸார் குறித்த அசிரிமூடைகளை ஏற்றிக் கொண்டு சென்றதாக தம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும். ஆனால் அதில் எந்தவித கட்சி சார்ந்த விடயங்களைளோ, சின்னங்களோ, இல்லை, வீதியில் வாகனத்தில் கொண்டு செல்லப்பட்ட நிலையிலேயே அது தம்மிடம் அழைத்துவரப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

தலா 5 கிலோ எடையுள்ள 250 அரிசி மூடைகளை ஏறாவூர் பகுதியிலிருந்து களுவாஞ்சிகுடி பிரதேசத்தின் கல்லாறு பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன. கல்லாறு பகுதியிலிருந்து ஒருவர் வந்து அந்த அரிசி மூடைகளை பெற்றுக் கொள்ளவிருந்துள்ளார். எனினும் அரிசி மூடைகளை ஏற்றிக் கொண்டுவந்த வாகனத்தின் சாரதி உரிய நபருக்கு தொலைபேசி அழைப்பெடுத்துள்ளார். அவர்வருவதற்குகாலதாமதமான நிலையில் உரிய வாகனத்தின் சாரதி கல்லாறு பகுதியிலிருந்து மீண்டும் ஏறாவூர் பகுதி நோக்கி திரும்பிச் செல்லும் வழியிலேயே அவர் தேர்தல் திணைக்கள அதிகாரிகளால் வழிமறிக்கப்பட்டு பொலிஸாரிடம் கொண்டு செல்லப்பட்டுள்ளளார்.

எனினும் தான் தனது வாகனத்தில் ஏற்றி வந்த அரிசி மூடைகளை யாருக்கு ஒப்படைக்க வேண்டும் என தனக்குத் தெரியாது எனவும், கல்லாறு பகுதியிலிருந்து ஒருவர் வந்து பெற்றுக் கொள்வார் எனவும், அரிசி மூடைகளை ஏற்றிவிட்ட கடைஉரிமையாளர் தெரிவித்தாகவும், உரிய நபர் அங்கு வந்து அரிசி மூடைகளை பொறுப்பேற்காத நிலையில் தான் திரும்பிச் சென்ற நிலையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றதாகவும் உரிய வாகனத்தின் சாரதியின் பக்கமிருந்து தகவல்கள் வெளிவருகின்றன.

இவ்வாறு ஒரு தொகுதி அரிசி மூடைகள் கைப்பற்றப் பட்டுள்ளன என அறிந்த பல அரசியற் கட்சிகளின் வேட்பாளர்களும், ஆதரவாளர்களும், களுவாஞ்சிகுடி பொலிஸ் நிலையத்திற்கு விரைந்து தகவல்களைப் பெற்றுக் கொள்வதில் ஆர்வம் காட்டியிருந்தையும் அவதானிக்க முடிந்தது.

# வவுனியாவில் 1605 உத்தியோகத்தர் தேர்தல் கடமையில் ஈடுபட்டுள்ளனர்

## மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் தகவல்



வவுனியா மாவட்டத்தில் 1605 உத்தியோகத்தர்கள் தேர்தல் கடமையில் ஈடுபட்டுள்ளனர் என மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலரும், அரச அதிபருமான பீ.ஏ. சரத்சந்திர தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று (திங்கட்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

சுதந்திரமானதும், நேர்மையானதுமான தேர்தலுக்கான ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. ஒரு மாநகரசபை மற்றும் நான்கு பிரதேச சபைகளுக்காக 103 பேர் தெரிவு செய்யப்படவுள்ளனர். இதற்காக 1731 பேர் போட்டியிடவுள்ளனர். ஒரு லட்சத்து 79 ஆயிரத்து 293 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். வாக்கு பெட்டிகள் வாக்களிப்பு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மாவட்டத்தில் 154 வாக்களிப்பு நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. 1605 உத்தியோகத்தர்கள் தேர்தல் கடமையில் ஈடுபட்டுளனர். 1307 பொலிஸ் உத்தியோகத்தர்கள் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரிவித்தார். 100




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.05.2025இல் வெளியிடப்பெற்றது